# கல்வி அமைச்சு

# வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்

SDFL
The Nation's Leader in Skills Development

# பதவி வெற்றிடங்கள்

## கல்வி அமைச்சின் கீழ் காணப்படும் வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக தகுதி வாய்ந்த இலங்கை பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(1) சேவை வகை : "சிரேஷ்ட முகாமையாளர்" - (HM 1-1)

பதவி : பொதுமுகாமையாளர்

பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கை - 01

- **தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

**(அ) கல்வி தகைமைகள் -**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் மூலம் வணிகவியல்/ பொருளாதார அறிவியல்/வணிக நிர்வாகம்/ மேலாண்மை பட்டம் ஒன்று உடன் முதுகலை பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்றுறை நிறுவனமொன்றில் தொடர்புடைய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

(ஆ) அனுபவம் -

பல்கலைக்கழகப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின் அரசாங்கத்தில் அரச கூட்டுத்தாபனமொன்றில் சபையொன்றில் நியதிச் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் "முகாமைத்துவ" மட்டத்திலான பதவியொன்றில் குறைந்த பட்சம் குறித்த துறையில் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் -**

"முகாமைத்துவ" சேவை மட்டம் தரம் I இல் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட கால உரிய தொழில் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

- வயதெல்லை -

40 வருடங்களுக்குக் குறையாமலும் 55 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். **உள்வாரி விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.**

- சம்பளத் திட்டம் -

HM 1-1- 2016 – Rs.80,295 - 15x2270 – 114,345

(2) சேவை வகை - "கனிஷ்ட முகாமையாளர்" (JM 1-1)

பதவி : நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்

பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கை - 02

- **தகைமைகள் -**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் -**

கல்வி தகைமைகள் -

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் ஏதாவது ஒரு துறையில் பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின் அரச திணைக்களம் / அரச கூட்டுத்தாபனமொன்றில் / சபையொன்றில் /நியதிச் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வணிக நிறுவனமொன்றில் குறிப்பிட்ட துறையில் குறைந்த பட்சம் ஒரு (01) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் -

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் ஏதாவது ஒரு துறையில் பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின் குறிப்பிட்ட துறையில் : "முகாமைத்துவ உதவியாளர்" (தொழில்நுட்பம்) சேவை மட்டத்தில் உள்ள பதவி ஒன்றில் குறைந்த பட்சம் குறித்த துறையில் ஒரு ( 01) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**மற்றும்**

(ஆ) குறிப்பிட்ட துறையில் "முகாமைத்துவ உதவியாளர்" (தொழில்நுட்பம்) தரம் II இல் சேவை மட்டத்தில் உள்ள பதவி ஒன்றில் ஐந்து ( 05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

- வயதெல்லை -

22 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். **உள்வாரி விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.**

- சம்பளத் திட்டம் -

JM 1-1-2016 – Rs. 42,600-10X755 - 18 X 1135 - 70,580

(3) சேவை வகை : "முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்" (MA 2–2)

பதவி : பயிற்சி போதனாசிரியர்

பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கை - 01

- **தகைமைகள் -**

**கல்வி தகைமைகள் -**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதரப்) பரீட்சையில்

- சிங்களம் / தமிழ்
- ஆங்கிலம்
- கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தியிருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் (பொதுப் பரீட்சை நீங்கலாக) சித்தி அடைந்திருப்பதுடன் மூன்றாம் நிலைக் கல்விப் படிப்பைத் தொடர தேவையான தகைமை நிலையை அடைந்திருத்தல்.

**தொழில்நுட்ப திறன்கள் / நிபுணத்துவம் -**

அரச மற்றும் அரச நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தால் பயிற்சியளிக்கப்படும் தொழில் பயிற்சி துறைக் உரிய பயிற்சி வழங்கள் அல்லது விரிவுரை அளித்தல் தொடர்பான குறைந்தபட்ச மூன்று (03) வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

- வயதெல்லை -

18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். **உள்வாரி விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.**

- சம்பளத் திட்டம் -

MA2-2-2016-Rs.30,310-10X300-7X350–4x600–20x710– 52,360

(4) சேவை வகை: "முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)" (MA 1 - 2)

பதவி : முகாமைத்துவ உதவியாளர்

பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கை - 02

- **தகைமைகள் -**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் -**

**கல்வி தகைமைகள் -**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரன தரப்) பரீட்சையில்

- சிங்களம் / தமிழ்
- ஆங்கிலம்
- கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தியிருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்த பட்சம் மூன்று (03) பாடங்களில் (பொதுப் பரீட்சை நீங்கலாக) சித்தியெய்தியிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் -

(அ) ஆரம்ப தரம் - தொழில் நுட்ப தேர்ச்சியற்ற ஓரளவு தொழில் நுட்ப தேர்ச்சி பெற்ற சேவை வகையில் கீழே "ஆ" "இ" "ஈ" பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்

- சிங்களம் / தமிழ்
- கணிதம்

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தியிருத்தல்.

கனினி வார்த்தை செயலாக்கம் / தட்டச்சு பற்றிய மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டது ஒரு படிப்பை முடித்திருத்தல் அல்லது வேறு அதற்கு சமமான மட்டத்திலான திறமையை கொண்டிருத்தல் மேலதிக திறமையாக கருதப்படும்.

(இ) திறன்கள் மேம்பாட்டு நிதியத்தில் உத்தியோகத்தராக நிரந்தர நியமனம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்குக் கிட்டியதாக நிரந்தர நியமனமொன்றைப் பெற்று குறைந்த பட்சம் ஐந்து (05) வருட கால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- வயதெல்லை -

18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். **உள்வாரி விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.**

- சம்பளத் திட்டம் -

MA1-1-2016 –27,910-10X300-7X350–4x495–20x660–48,540

விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் :

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
2. குறிப்பிட்ட பதவிகளுக்கு வழங்கப்படும் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதுடன் அக்கடமைகளை செய்து முடிப்பதற்காக நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கு தேவையான உடல் ரீதியாக மற்றும் உள ரீதியாக தகுதி உடைய ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
4. இப்பதவிகள் நிரந்தர பதவிகள் ஆகும் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரித்துடையவை ஆகும்.
5. மேற் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக அரசினால் அனுமதி அளிக்கப்பட்டு வழங்கப்படும் வாழ்க்கை செலவு கொடுப்பனவு மற்றும் விசேட கொடுப்பனவு வழங்கப்படும்.
6. அரச சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களின் விண்ணப்பங்களை உரிய நிறுவன தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
7. நேர்முக தேர்வுகளுக்கு அழைப்புக்கள் விடுப்பது பதவி நியமனம் வழங்க உரித்துடையவரின் இறுதி தீர்மானங்களுக்கு அமையவே ஆகும்.

முழுமையான சுய விபரங்கள் அடங்களாக பிறப்புச் சான்றிதழ், அனைத்து கல்வி மற்றும் தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ் மற்றும் சேவை கடிதம் பிரதி என்பனவற்றுடன் உறவு முறை அல்லாத இருவரின் பெயர் முகவரி அடங்கிய பரிந்துரை உடன் கூடியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பதிவுத்தபாலில், தலைவர், வரையறுக்கப்பட்ட திறன்கள் மேம்பாட்டு நிதியம், "நிபுனதா பியச", 07 ஆம் மாடி, இல.354/2 ,எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05. எனும் முகவரிக்கு 2024.06.12 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கச்செய்யவும். தபாலின் போது காணாமல் போகும் அல்லது தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பாக திறன்கள் மேம்பாட்டு நிதியம் பொறுப்பு கூற மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பிறகு இந்நிறுவனத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி பெயரை தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட திறன்கள் மேம்பாட்டு நிதியம்,**
**"நிபுனதா பியச" , 07 ஆம் மாடி,**
**இல.354/2, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 05.**
**தொடர்புகளுக்கு : 0112507815**

**திகதி : 2024.05.07**